# உயிரியல் வினாத்தாளை முகங்கொடுப்பது எப்படி ???????

**(படைத்த இறைவனின் பெயரால்**
**உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக)**

கற்பனை செய்து கொள்ளுங்கள்.
"என் கண் முன்னே உயிரியல் வினாத்தாள் ஒன்று உள்ளது"
அப்படியாயின் உங்கள் மனதில் எழும்
அடுத்த வினாக்கள் என்ன தெரியுமா??

->என்னால் இதை செய்யமுடியுமா??
->எப்படி இதை செய்வது??
->தெரியாத வினாக்கள் வந்திருந்தால்??

இப்படி அந்த பரீட்சைத்தாளை பார்வையிடாமலே இவ்வளவு வினா எழும்ப காரணம் என்ன தெரியுமா??
பரீட்சைக்கான ஆயத்தங்களில் ஈடுபடும் மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபடுவதில்லை.
விளங்கக்கூறின்
புத்தகங்களையும், பயிற்சிப்புத்தகங்களையும் வாசிக்கும் மாணவர்கள் அதை பிரயோகிப்பதற்கு பரீட்சை வினாத்தாள்களை செய்து பார்ப்பதில்லை.

இங்கு ஒரு உயிரியல் பரீட்சைத்தாளை எப்படி செய்யலாம்? செய்வதற்கு எவ்வாறு ஆயத்தமாகலாம்? என்று நோக்குவோம்.

ஒவ்வொரு பரீட்சைத்தாளும்
3 விதமான வினாப்பத்திரங்களையும் உள்ளடக்கி இருக்கும்.
அதில்,

1-பல் தேர்வு வினாக்கள் (MCQ) 50
2-அமைப்பு வினாக்கள் (Structure) 4•(a,b,c)
3-கட்டுரை வினாக்கள்(Essay) 6

இங்கு ஒவ்வொன்றிற்குமான கற்றல் முறை அவற்றின் வினா வடிவம் மாற்ற மடைவதால் மாறுபடுகிறது.

”ஒரு மாணவன் தன் பரீட்சைக்கு முன் எத்தனை சதவீதம் உயிரியல் கற்றுள்ளான்? என்பதில் ஒரு போதும் அவனது உயிரியல் பரீட்சைப்புள்ளி தங்கியில்லை"
மாறாக அவனால் எத்தனை வினாக்களுக்கு முகங் கொடுக்க முடியும் என்பதிலேயே தங்கியுள்ளது.
அதாவது தான் கற்ற பாடப்பரப்புகளில் வினாக்கள் வந்தால் பம்பர் ஆபர், இல்லையேல் .........

ஆகவே இங்கு எப்படி
வினா வரும் பகுதிகளை கற்பது என்றால்
சிம்பல் இருக்கவே இருக்கு சிறுகுறிப்பு

**இங்கு MCQ ஐ நோக்குவோமானால்**,

உமது பாடப்பரப்பில் உள்ள அத்தனை அலகுகளையும் மிக ஆழமான முறையில் ஊடுறுவியதாக அனேக வினாக்கள் வரும்
இதற்கு மிக இலகுவான வழிமுறையே இந்த சிறு குறிப்பு!
அதாவது பாகுபாடு தவிர ஏனைய அனைத்து அலகுகளினதும் உள்ளடக்கங்களை சிறு குறிப்பு மூலம் மனனமிட்டுக்கொள்ளலாம்.

இங்கு சிறுகுறிப்புக்கள் வினா விடை அமைப்பில் இருப்பதே சிறந்தது.

ஆகவே எப்படியும் பல் தேர்வு வினாக்கள் ஒரு நாளிளும், பகுதி 2 இன்னுமொரு நாளிளுமே நடைபெரும்.
ஆகவே பரீட்சைக்கு 2 நாட்களுக்கு முன் சிறுகுறிப்புகள்/ சுருக்கக்குறிப்புக்களை தெளிவாக பார்ததுக் கொள்ளவும்.
பரீட்சைக்கு முதல்நாள் கடின முற்று மனனமிட வேண்டியதில்லை. சாதாரணமாக நோக்கும் போதே மனதில் பதிந்து விடும். அதுவும் சிறுகுறிப்பு வினா-விடை வடிவம் என்றால் வினா-விடையாகவே பதிந்து விடும்.

அதேபோல் பரீட்சை முதல் நாள் ஆசிரியர் வழிகாட்டியில் உள்ள ஆழமான முக்கிய புள்ளி வசனங்களை நோட்டமிட்டு செல்லவும்.
MCQ வினாப்பத்திரம் செய்ய செல்லும் போது வரைவிலக்கனம்,கட்டுரை குறிப்புக்களை பார்த்து நேரத்தை வீனடிக்க கூடாது.
தேவை சுருக்கமான புள்ளி வடிவ குறிப்புகள் மாத்திரமே.

அத்துடன் பரீட்சைக்கு முதல் நாளே கடந்தகால பரீட்சைத்தாள்களில் ஒரு 10 வருட பல் தேர்வு வினாக்களை மாத்திரம் பார்த்து விட்டு செல்லவும் (முக்கியம் பார்த்து விட்டு பாடமாக்கிவிட்டு அல்ல)

இங்கு பல்தேர்வு வினாவில் தேர்ச்சியும்,செயலாற்றலும் அதிகரிக்க வேண்டுமானால் நீர் கடந்த 15 வருட கடந்த கால வினாப்பத்திர பல்தேர்வு வினாக்கள் தாராளமாக போதும்.
ஒவ்வொரு வினாவிலும் வினாக்குரிய விடையை இனங்காண்பதை விட ஏனைய விடைகள் ஏன் வராது? என்பதை இனங்காண்பதே மிக முக்கியம். பல்தேர்வு வினாக்களை சரியான முறையில் பரீட்சைக்கு அணுகும் மாணவர்கள் கண்டிப்பாக அவர்களது கடந்தகால வினாத்தொகுப்புகளில் ஒவ்வொரு பல்தேர்வு வினாவிற்கு அருகிலும் சிறு இடைவேளி கூட இல்லாமல் ஒரு தொகை குறிப்புகள் எழுதி இருப்பார்கள். அப்படி எழுதப்பட்ட குறிப்புகள் என்றால் பரீட்சைக்கு முதல் நாள் மிக உதவியாக இருக்கும். (இங்கு ஆசிரியர் அக்பர் நிஜாம் போன்ற உயிரியல் பல் தேர்வு வினாக்களுக்கு விளக்கம் எழுதுவோரின் புத்தகங்களை நான் பரிந்துரை செய்கின்றேன்.

எது எவ்வாறோ 50 வினாக்களில் 40ற்கு மேல் சரி எடுத்தால் உங்களுக்கு கிடைக்கவிருக்கும் உயர்ந்த புள்ளிகளை உயிரியலில் யாராலும் தடுக்க முடியாது??
50 ற்கு 43/44 என்றால் இலகுவாக A எடுத்து விடலாம்.
50ற்கு 35/ அதை விட குறைவு என்றால்
A எடுப்பது அவ்வளவு சாத்தியம் இல்லை.
50 ற்கு 45/அதற்கு மேல் என்றால் A கன்போர்மாக வரும்.

**அடுத்து அமைப்பு வினாக்களும்,கட்டுரை வினாக்களும்!**
இங்கு பரீட்சைக்கு முதல் நாள் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவக்கூடியது
-> ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி
-> கடந்த கால வினாப்பத்திரங்கள்

இங்கு நுனிப்புல் மேய்தல் எனும் செயற்பாடே செய்யப்பட வேண்டும்.
அதாவது
நுனுக்கமான,ஆழமான குறிப்புக்கள் ( பல்தேர்வு வினாவிற்குரியவை) நோக்கப்படக்கூடாது.
நீங்கள் செய்ய வேண்டியவை
பரீட்சைக்கு முதல் நாள் வினாத்தாளோ வினாவையோ பார்க்க வேண்டாம்.

ஒவ்வொரு வருட கடந்த கால அமைப்பு வினாக்களின் விடைகள் உள்ள பக்கத்தை மாத்திரம் புரட்டவும்.
அங்கு விடைகளை மாத்திரம் நோட்டமிட்டு செல்லவும்.விடைகளை பார்க்கும் போதே வினா என்னவென்பது உமக்கு தெரிந்து விடும்.
இதன் இலாபம் என்ன வெனில் அனேக வினாக்கள் கடந்த கால வினாக்களை ஒட்டியதாகவே அமையும்.
ஆகவே அதே வினாவோ அதே மாதிரியான வினாவோ வருமானால் விடை தானாகவே கண் முன் வந்து நிற்கும். நீர் பயப்பட தேவையில்லை.

அமைப்பு வினாவில் ஒரு வழக்கம் உள்ளது எப்பொழுதும் சரியான/ மிகச்சரியான விடைகளுக்கு மாத்திரமே புள்ளி அதாவது சமாளித்து எழுதப்படும் எந்த விடைக்கும் புள்ளிகள் கிடையாது.
முக்கியமாக வரைவிலக்கணங்கள் உள்ளடங்கும்.
இங்கு வரைவிலக்கணங்கள் திருத்தப்படுவது ஒரு வரைவிலக்கணம் 5 பகுதிகள் உடையது என்றால்
5/5 என்றால் = உரிய புள்ளி
4/5 or அதை விட குறைவு என்றாலும் சரி =0 தான்

உ/ம்,

இழையம்
-குறித்த தொழில்/ தொழில்களை
-சிறத்தலடைந்த
-ஒரே உற்பத்தி
-பௌதீக இணைப்பு
-கலக்கூட்டம்

இவ்வாறு இருந்தால் மாத்திரம் 20 புள்ளி என்றால் 1 குறைவாக ( ஒரே உற்பத்தி
எழுதப்படவில்லை) என்றாலும் 0 புள்ளிகளே வழங்கப்படும்.

ஆகவே ஆசிரியர் வழிகாட்டியில் வெருமனே கண்ணில் தென்படும் வரைவிலக்கணங்களை பார்வையிட்டு விட்டு செல்லுங்கள் பரீட்சை மண்டபத்தில் தன்னால் ஞாபகம் வரும்.

அமைப்பு வினாவில் ஒரு வினாவிற்கு விடை தெரியாதா? கவலை வேண்டாம் "வெட்டு ஒன்று துண்டு இரண்டு"
முறைப்படி விட்டு விட்டு அடுத்த. வினாவிற்குள் நுழைவதுதான் புத்திசாலித்தனம்.
ஏனென்றால் அமைப்பு வினாவின் மொத்தநேரமே 4 வினாக்களுக்கும் 15 நிமிடம் படி 1 மணித்தியாலம் தான்.
ஆகவே இங்கு கட்டுரை வினாக்களைப் போல் சிந்திப்பதற்கு நேரமில்லை.

வினாவை பார்ப்பது விடை தெரிந்தால் எழுதுவது இல்லையேல் அடுத்த வினாதான்.
ஏனென்னறால் இங்கு கஸ்டப்பட்டு நேரம் ஒதுக்கி நீர் சரியான விடையை எழுதினாலும் ஒரு முழு அமைப்பு வினாவிற்கு 100 புள்ளிகள் தான் அதாவது மொத்தத்தில் 5 புள்ளிகள் தான்.
ஆனால் நீர் அதற்காக அடுத்த வினாவிற்குரிய நேரத்தையும்,100 புள்ளிகளையும் இழக்க நேரிடும்.

இவற்றையல்லாம் தாண்டி இவ்வளவையும் இழந்து நீர் எழுதும் வினாவிற்கு 100 புள்ளிகள் நிச்சயம் வரும் என்பதும் உறுதியில்லை.

ஆகவே புத்திசாலித்தனமாக வினாப்பத்திரத்தை அணுகுவதே ஒரு சிறந்த மாணவனிற்கு நல்லது.

அதே போல் கட்டுரை வினாக்களுக்கு செய்ய வேண்டியவை பகுதி இரண்டு பரீட்சை உள்ள நாள் அன்று அதிகாலை 4-5 மணிக்குள் எழும்பி கடந்தகால வினாப்பத்திரத்தின் விடைப்பக்கத்தை மாத்திரம் பார்க்கவும்.

கட்டுரை வினாக்கள் 6 உண்டு அதில் 4 செய்ய வேண்டும் 2 விருப்பத் தேர்வு என்று கூறப்படும்.ஆனால் அது உண்மை இல்லை இங்கு உள்ள சிறுகுறிப்பு எழுதல் என்பது நான் ஏற்கனவே கூறியது போல் கண்கட்டு வித்தையே

எந்த ஒரு சிறந்த மாணவனாலும் சிறு குறிப்பு 3 ஐயும் 30 நிமிடங்களுக்குள் எழுதி முடிக்க முடியாது. அது விதிக்கப்பட்ட முறைப்படி
ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு பாடப்பரப்பிலிருந்து வரும் சிந்திப்பதற்கே ஒவ்வொன்றிற்கும் 5 நிமிடங்கள் படி 15 நிமிடங்கள் சென்றுவிடும்.
பின் எழுதுவதற்கு ஒவ்வொன்றிற்கும் 10 நிமிடம் படி 30 நிமிடங்கள் மொத்தம் 45 நிமிடங்களை எடுத்துக்கொள்ளும் அதாவது 15 நிமிடங்கள் அடுத்த வினாவில் காலி.
ஆகவே சிறுகுறிப்பு வினா தவிர்தது 5 வினாக்கள் 4 செய்ய வேண்டும் 1 விருப்பத்தேர்வு.

அதோடு விடைகளின கொள்ளளவையும் பாரத்துக் கொள்ளவும்
மூன்று வகை
30•5=150
38•4=152
50•3=150

இதில் விடைகளின் எண்ணிக்கை குறையும் போது மாணவர்கள் புள்ளிகள் எடுக்கும் அளவு அதிகரிக்கும்.

இங்கு பரீட்சை வினாத்தாள் திருத்தும் போது முதல் அமர்வில் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு தனி விடைத்தாள் வழங்கப்பட்டு அது அக்குழுவின் தலைமையாளரால் விளங்கப்படுத்தப்பட்டு தெளிவூட்டப்படும். பின் ஒவ்வொருவரும் தனித்தனியே விடைத்தொகுப்பை பார்வையிட நேரம் வழங்கப்பட்டே திருத்துவதற்கு விடப்படுவார்கள்.
இங்கு கட்டுரை வினாக்களின் விடைகளை திருத்தும் போது திருத்துனர் பரீட்சை விடைத்தாளில் உள்ள விடைக்குறிப்புக்கள் உங்கள் விடை எழுதப்பட்ட பந்திகளில் எங்கேனும் தென்பட்டால் அதற்கு சிறிதாக சரி அடையாளமிடுவார். இவ்வாறு இடப்பட்ட அடையாளங்களை இறுதியாக மொத்தக்கணக்கெடுத்து விடைக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளிகளால் பெருக்கியே இறுதி புள்ளி இடப்படும்.
முக்கியம் மாணவனின் விடை அமைப்பு வினாவிற்கு எழுதுவது போன்று points வடிவில் அமையக்கூடாது.
மாறாக கட்டுரை வினா என்பதால் ஒரளவாவது கட்டுரை வடிவில் அமைய வேண்டும்.
அதிலும் நீர் பயப்படத்தேவையில்லை உமது விடை பந்தியில் எந்த மூலையில் இருந்தாலும் திருத்துனர் தேடிப்பிடித்து சரி இடுவார்.

கட்டுரை வினாவில் ஒரு வினாவிற்கு 1/2 மணி நேரம் ஒதுக்கப்படும் அதில் முதல் 5 நிமிடத்தை யோசிப்பதற்கும் அவ்வினா சார்பில் மனதில் தோன்றுவதை அப்படியே ஒப்பிக்க 20 நிமிடத்தையும் எடுத்துக் கொள்க. மொத்தம் 25 நிமிடம் , 5 நிமிடத்தை சேமிக்க!

இவ்வாறு செய்தால் எந்த ஒரு வினாப்பத்திரத்தையும் மிக இலகுவாக கையாண்டு விடலாம். நீங்கள் சம்பூரணமாக கற்று தயாராகாவிடிலும்.

"துரோனாச்சாரியார் கேட்ட போது பறவையின் கண்மட்டும் தான் தெரிகிறது என்று அர்ச்சுனன் கூறியது போல்" ஒவ்வொரு மாணவனின் பார்வையும் பரீட்சை தாளில் அமையாது வினாக்களில் அமைய வேண்டும்.

**எம்.எம்,**
**முகம்மட் மபாஹிர்,**
**இயன் மருத்துவம்,**
**பேராதனிய.**